## வீதி வலையமைப்பு முன்னேற்றச் செயற்திட்டம் -2011

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 33,379,753 ஆக இருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 17,546,380,192 ஆக இருந்தது. பின்வரும் கூற்று மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பைக் காட்டுகிறது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2011 | 2010 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் - பதிவழிக்கப்பட்ட பெறுமதி/ (மாற்றப்பட்டது) | (179,599) | (844,843) | 12,435 |
| பூர்த்தியாக்கப்பட்ட சிவில் வேலைகள் | 131,711,746 | 212,479,214 | 14,138,782,303 |
| நடைபெறும் வேலைகள் | - | - | 130,619,771 |
| செயற்திட்ட நிர்வாகம் | 18,560,055 | 19,505,840 | 3,230,190,330 |
| காணிச் சுவீகரிப்பு | 2,036,203 | 3,278,394 | 65,173,392 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | (118,748,652) | - | (18,398,039) |
| | 33,379,753 | 234,418,605 | 17,546,380,192 |

## 2.2 கட்டுநிதி நிதியம்

இந்த செயற்திட்டத்தின் கீழ் 2009 ஏப்ரல் 30 வரை இரண்டு கட்டுநிதி நிதியக் கணக்குகள் செயற்பாட்டில் இருந்தன. அப்போதிலிருந்து எந்தவொரு வெளிநாட்டு நிதிகளும் பெறப்பட்டிருக்காததுடன் அதிலிருந்து கட்டுநிதி நிதியக் கணக்கில் எவ்வித மீதியும் இருக்கவில்லை.

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு கட்டுநிதி தீர்ப்பனவுக்கான காலம் 2009 ஏப்ரல் 30 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 62,425,145 கிரயத்தில் செயற்திட்ட காலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை வீதி அபிவிருத்தி

அதிகாரசபைக்கு மாற்றுவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 13,189,007 பெறுமதியான செயற்திட்டத்தின் சில நிலையான சொத்துக்கள் செயற்திட்ட நடவடிக்கைகளில் நேரடியாக தொடர்புபட்டிருக்காத தாபனங்களின் பொறுப்பில் வைத்திருக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட் ரூபா 300,000 தொகையான முற்பணம் மற்றும் வெளிநாட்டு பயணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 233,500 தொகையான மற்றுமொரு முற்பணம் என்பன இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்க்கப்படாதிருந்தது. மேலும், ஏழு ஒப்பந்தகாரர்களால் 2008 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் ரூபா 229,066 மொத்தத் தொகையான பிடி காசினை விடுவிப்பதற்கோ அல்லது வருமானமாக கருதுவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் விடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 120,617 கூட்டுமொத்தத் தொகையான அட்டுறு செலவினம் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் நிலுவையாகக் காணப்பட்டன.

(இ) சிவில் வேலைகளிற்கான ஆரம்ப மதிப்பிடபப்ட்ட செயற்திட்டக் கிரயம் ரூபா 9,564 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 35.48 மில்லியனாக இருந்ததுடன் அவற்றில் ரூபா 6,933 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 25.19 மில்லியன் கடனளிக்கும் முகவரால் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்டது. எவ்வாறாயினும், மேலதிக வேலைகள், விலைத்தளம்பல் போன்றன காரணமாக செயற்திட்டத்தின் சிவில் வேலைகளிற்கான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உண்மையான கிரயம் ரூபா 17,578 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. ஆகவே மீள ஒதுக்கீடுகள் செய்த பின்னர் சிவில் வேலைகளிற்கான கடன் வழங்கல்கள் ரூபா 9,629.06 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 46.19 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அரசாங்க பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 7,949 மில்லியன் வரை அதிகரித்திரந்தது.

(ஈ) செயற்திட்டத்தின் கீழான கசல வீதி நிர்மாண வெலைகளும் ஏஏ010 கடுகஸ்தோட்ட – குருனேகல வீதி (37.8 கிமீ) மற்றும் பீ 205/369 கடுகஸ்தோட்ட – வத்தேகம வீதி (9.8 கிமீ) என்பவற்றின் நிர்மாணம்

தவிர 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏஏ 010 கடுகஸ்தோட்ட – குருனேகல வீதி (37.8 கிமீ) மற்றும் பீ205/369 கடுகஸ்தோட்ட – வத்தேகம வீதி (9.8 கிமீ) என்பவற்றின் புனரமைப்பிற்கு ரூபா 1,088,612,328 பெறுமதியான ஒப்பந்தம் சீனக் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சிவில் வேலைகள் கூறின் கீழான வேலைகளின் நோக்கெல்லை ஒப்பந்தகாரரால் காட்டப்பட்ட மந்தமான முன்னேற்றம் காரணமாக பீஓகியூ இல் செய்யப்பட்ட முரணான கட்டளைகள் மற்றும் மாற்றங்களின் கீழ் மெருகூட்டப்பட்டிருந்தது. ஆகவே ஆரம்ப ஒப்பந்த பெறுமதி அதன் பின்னர் ரூபா 553,387,762 ஆல் அதிகரித்திருந்தது. கடுகஸ்தோட்டை- வத்தேகம வீதிப் பிரிவு (9.8 கிமீ) 2010 இல் ஆரம்ப ஒப்பந்தகாரரிடமிருந்து மொத்தமாக மீளப்பெறப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் இன்னொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் வழங்கிய பின்னர் 6 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கடுகஸ்தோட்டை- வத்தேகம வீதியின் புனரமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறப்பட்ட தகவலின்படி, ஏஏ 010 கடுகஸ்தோட்டை- குருனேகல வீதியின் 03+100 கிமீ முதல் 14 + 160 கிமீ வரையான பிரிவின் மிகுதி வேலைகள் மத்திய மாகாணத்தின் வீதி அபிவிருத்தி சபையின் மாகாண வீதிப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மஹனேகம நிர்மாண உபகரணக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மாகாணப் பணிப்பாளரின் கருத்துப்படி, புனரமைப்பு வேலைகளின் 60 % 2011 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதி கணக்காய்விற்காக பெறப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதி மற்றும் வேலைகளின் பூர்தியாக்க வேண்டிய திகதி என்பவற்றை கணக்காய்வில் தெரிந்துகொள்ள முடியாதிருந்தது.

(உ) காணித் தீர்ப்பனவு நடவடிக்கைகளிற்காக முறையான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ஆகவே, அத்தகைய நடவடிக்கைகளை பூர்த்தியாக்கல் காலம் மற்றும் அவற்றின் மீது

ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்ட கிரயம் கணக்காய்வில் அறிந்துகொள்ள முடியாவில்லை. எவ்வாறாயினும், காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் உரிய திகதிகளில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2001 செப்தெம்பர் 03 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக பிரதேச செயலகங்களிற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, சகல கொடுப்பனவுகளும் 2002 பெப்ரவரி 28 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்படவேண்டும். எவ்வாறாயினும், 10,721 காணித் துண்டுகள் தொடர்பான ரூபா 147,158,366 கூட்டுமொத்தத் தொகையான இழப்பீட்டு கொடுப்பனவின் தாமதம் மீதான வட்டி 2011 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்டிருந்தது. ஆதலால், செயற்திட்டமானது மேலதிக செலவினை தவிர்ப்பதற்கு ஏதுவாக இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ii) கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, பின்வரும் வீதிகளில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளிற்காக சுவீகரிக்கப்பட்ட 153 காணித் துண்டுகளிற்கான இழப்பீட்டுக்காக கொடுப்பனவுகள் 2011 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

| **வீதி** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இழப்பீட்டு தீர்ப்பனவுகளில் சர்ச்சையிலுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| கடுகஸ்தோட்டை- குருனேகல வீதி | 118 |
| கடுகஸ்தோட்டை- வத்தேகம வீதி | 14 |
| பண்டுர - இங்கிரியா வீதி | 05 |
| பஸ்யால- மீரிகம வீதி | 07 |
| அம்பலாங்கொட – எலிப்பிட்டிய வீதி | 09 |
| **மொத்தம்** | **153** |

## 4. செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

இந்த செயற்திட்டத்தின் 5(ஈ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வேலைகளை தவிர கடன் பெறுவனவுகள் மூலம் மேற்கொள்ளவேண்டுமென பட்டியலிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளானது 2008 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அனைத்து தகைமையுள்ள செலவினமும் 2009 ஏப்ரல் 30 இற்கு முன்னர் கோரப்பட்டு மீளப்பெறப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையும் 2009 மே மாதத்தில் ஆலோசனையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட கணக்குகளை மூடுவதற்கும் உரியதரப்பினருக்கு சொத்துக்களை கையளிப்பதற்கும் நிறைவேற்றல் முகவரான வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.